OS 57/2024

வா.சா. 3 ஸ்ரீதரன் த/பெ சின்னக்கண்ணன்

நாள் 29.10.2025

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. வாதியை எவ்வாறு பழக்கம் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக பழக்கம். தாவா புரோ நோட்டை நான் தான் எழுதினேன். பாண்டு எழுதிய நேரம் சொல்லமுடியுமா என்றால் 12 மணி முதல் 1 மணி இருக்கும். பாண்டு எழுதுவதற்கு யார் விவரம் சொன்னது என்றால் 2 பேரும் சொன்னார்கள். எவ்வளவு தொகைக்கு பாண்டு எழுதப்பட்டது என்றால் 2 லட்சத்திற்கு எழுதப்பட்டது. வட்டி எவ்வளவு என்றால் 1பைசா வட்டி ஆகும். எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 08.11.2022ல் எழுதப்பட்டது. நான் இதுவரையிலும் எத்தனை பாண்டுகள் எழுதி இருப்பேன் என்றால் 5 அல்லது 6 பாண்டுகள் எழுதி இருப்பேன். இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் சாட்சி அளித்திருக்கிறேனா என்றால் இல்லை இது தான் முதல் முறை. வேலு தமிழில் கையொப்பம் போட்டிருக்கிறாரா அல்லது ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டிருக்கிறரா என்றால் தமிழில் கையொப்பம் போட்டிருக்கிறார். பிரபாகரன் எதில் கையொப்பம் போட்டிருக்கிறார் என்றால் அவர் கையொப்பம் போடவில்லை.

2. பாண்டு வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டதா அல்லது பச்சை பேப்பரில் எழுதப்பட்டதா என்றால் பச்சை பேப்பரில் எழுதப்பட்டது. நான் கையொப்பம் செய்யும் போது கையொப்பத்துடன் தேதி போடும் பழக்கம் உள்ளதா என்றால் ஆமாம். சாட்சி முனிதாஸ் அவருடைய கையொப்பத்திற்கு கீழே தேதி போட்டிருக்கிறாரா என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. பணம் என்ன வகையான ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது என்றால் 500 ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது. என்ன காரணத்திற்காக கடன் வாங்கப்பட்டது என்ற விவரம் பாண்டில் எழுதப்பட்டதா என்றால் எழுதப்பட்டுள்ளது எனக்கு தற்போது நியாபகம் இல்லை. வேலுவிற்கு கடனை திருப்பி கொடுக்கும் வசதி இருக்கிறதா என்றால் அது பணம் கொடுப்பவருக்கு தான் தெரியும். பிரபாகரன் என் நண்பர் என்பதால் வேலுவின் கையொப்பத்தை மோசடியாக போட்டு பாண்டு தயார் செய்து நண்பருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பாண்டை நிரப்பிய பிறகு தான் வேலு மற்றும் சாட்சி கையொப்பம் செய்தார்கள் அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன்.